# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 02 பிப்ரவரி 2025 தனிபிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-
Vol : 11 Issue No :02 February 2025 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-



## கேளுங்கள்

அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்...
...கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்.
(மத்தேயு 7 : 7,8)

# அன்பரின் ஊழியத்தின் நீண்ட நாள் பங்காளர் வாழ்வில் நடந்த இரண்டு அற்புதங்கள்!

**1. கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கூறியபடியே இயேசு தரிசனமானார்.**



என் பெயர் சரோஜா. நான் அன்பரின் ஊழியத்தில் 35 வருடமாக பங்காளராக இருந்து வருகிறேன். எங்கள் குடும்பத்திற்கு கர்த்தர் செய்த நன்மைகள் ஏராளம் ஏராளம்.

நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். 35 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எனக்கு தெரிந்த சகோதரி ஒருவர் என்னிடம் கூறியது, நம்ப ஊருக்கு தீர்க்கதரிசி ஒருவர் வந்திருக்கிறார். வா அந்த கூட்டத்திற்கு போகலாம் என சொல்லி என்னை அழைத்து சென்றார்கள். முதன் முதலாக நான் அந்த கூட்டத்திற்கு சென்று அமர்ந்து இருந்தேன். அப்பொழுது **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஏராளமான நபர்களை பெயர் சொல்லி அழைத்து தீர்க்கதரிசனமாக பல காரியங்களை சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனக்கு நம்பிக்கை இல்லை. உடனே நானும், "இன்சியல் உடன் என் பெயரைச் சொன்னால் மட்டுமே நம்புவேன்" என மனதிற்குள் நினைத்து உட்கார்ந்து இருந்தேன். அடுத்த நிமிடத்தில் ஐயா அவர்கள் என் இன்சியலுடன் என் பெயரை சொல்லி அழைத்தார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அந்தநாளில் பாவத்தைக் குறித்து பிரசங்கம் செய்தார்கள். நானும் என் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபித்தேன். என் மனதில் பெரிய சமாதானத்தை அந்த நாளில் உணர்ந்தேன்.

ஜெபத்தின் இறுதியில் ஐயா சொன்னார்கள், "இயேசுவை நேரில் காண விரும்புகிறவர்கள் இனி தேவையற்ற டி.வி. சினிமா பார்க்காதீர்கள். அவர் உங்களுக்கு வெளிப்படுவார்" என சொன்னார்கள். நானும் வீட்டிற்கு வந்து குடும்பத்தினரிடம் யாரும் இனி தேவையில்லாத டி.வி., சினிமா பார்க்கக்கூடாது என சொல்லிவிட்டு, நானும் பார்க்காமல் இருந்து ஜெபித்துக்கொண்டிருந்தேன். 3-ம் நாள் இரவு நேரத்தில் இரத்தம் வடிந்த கைகளுடன் இயேசு கிறிஸ்து எனக்கு தரிசனமானார். அந்த நாளில் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**2. உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்த குழந்தையை அற்புதமாக காப்பாற்றிய தேவன்!**

என் மகள் குடும்பம் சென்னையில் வசித்து வருகிறார்கள். மகளுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறது. கடந்த அக்டோபர் மாதம் 5-ம் தேதி என் மகள் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டின் 2-வது மாடியில் தளம் போட்டிருந்தார்கள். என் பேத்திகள் அங்கு சென்று விளையாடிக் கொண்டிருப்பது வழக்கம். அந்த நாளில் வீட்டு உரிமையாளரின் மகளும் வந்து என் பேத்திகளுடன் சேர்ந்து 2-வது தளத்தில் விளையாடிக்கொண்டிருந்தாள். விளையாடியது போதும் வாருங்கள் என கூப்பிட்டப்பொழுது அந்த மகள் கையை உதறி விட்டு வேகமாக சென்றப்பொழுது தண்ணிரில் வழுக்கி மேலே இருந்து கீழே விழுந்து விட்டாள். முதலில் ஒரு தண்ணீர் குழாயில் வேகமாக மோதி, மூடியிருந்த கிணற்றில் விழுந்து, அதன் பிறகு தரையில் விழுந்தாள்.

இதன் தொடர்ச்சியை 4-ஆம் பக்கத்தில் காண்க....

# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 11 ♦ பிப்ரவரி 2025 ♦ இதழ் 2

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான பங்காளர்களே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன்.

- பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.
- விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசி யாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.
- விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடை யாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;
- சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேது வான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:15-18)

மேற்கூறிய வசனங்களின்படி நாம் சுவிசேஷத்தை மிகவும் அவசரமாக அறிவிக்க வேண்டிய காலகட்டத்திற்கு வந்திருக்கிறோம். நம் வீட்டில் திருமணத்தை ஒரு குறிப்பிட்ட தேதியில் நியமித்திருக்கிறோம் என்றால் எவ்வளவு துரிதமாக அனைத்து வேலைகளையும் செய்வோம். ஒருவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கும்பொழுது அவரை காப்பாற்றுவதற்காக அனைத்து காரியங்களையும் மிக வேகமாக செய்துக்கொண்டிருப்போம். அந்த வேகம், அந்த அவசரம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் இன்றைக்கு தேவைப்படுகிறது.

ஒருவேளை நான் போதகர் இல்லை, சுவிசேஷகர் இல்லை என சொல்லாதீர்கள். உங்களால் இயன்றவரை சுவிசேஷத்தை அறிவிக்க ஆரம்பியுங்கள். அத்துடன் சுவிசேஷ ஊழியத்தை செய்துக்கொண்டிருக்கிற அன்பரின்

**ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.
Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

ஊழியத்தை உங்களால் முடிந்தவரை தாங்குங்கள். நம் கூட்டங்களின் வாயிலாக ஏராளமான ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். பத்திரிக்கையில் நீங்கள் படிக்கிற சாட்சிகள் அனைத்தும் கூட்டங்களுக்கு வந்த மக்கள் வாழ்வில் நடந்தவைகளே!

கூட்டங்களை நடத்துவதற்கு மாதந் தோறும் பல இலட்சங்களை செலவு செய்கி றோம். இந்த ஆண்டிலிருந்து உங்கள் குடும்பத்தின் சார்பாக ஒரு பொருத்தனை யோடு கூட்டங்களை நடத்துவதற்கு ஸ்பான்சர் செய்யுங்கள். கர்த்தர் நிச்சயமாக அதற்குரிய பலனை உங்களுக்கு பல ஆயிரம் மடங்காக தருவார்.

ஜனவரி மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். பிப்ரவரி மாதம் மதுரை, குண்டூர், ஹைதராபாத், ஜாஹிராபாத் மற்றும் திருச்சியில் நடைபெற யிருக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

நமது **Ministry of Jesus You Tube** சேனலில் வெளிவருகிற அனுதின அற்புதம், சிறப்பு செய்திகள் மற்றும் நேரலை நிகழ்ச்சி களை தவறாமல் பாருங்கள். நம்பிக்கை டி.வி. வாயிலாக வருகிற அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளைப் பாருங்கள்.

இதுவரை பத்திரிக்கைக்குரிய வருட சந்தாவை புதுப்பிக்காதவர்கள் உடனடியாக சந்தா தொகையை அனுப்பி பத்திரிக்கை ஊழியத்தைத் தாங்குங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும் நீடிய ஆயுளுக்காகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல சுக, பெலனுக்காகவும் ஜெபியுங்கள்.

கர்த்தர் தாமே உங்கள் அனைவ ரோடும் இருப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்
Dr. ஜேன் ஜாஷ்வா
jane@mojindia.org

**முன் அட்டை உள் பக்க சாட்சியின் தொடர்ச்சி**

## அன்பரின் ஊழியத்தின் நீண்ட நாள் பங்காளர் வாழ்வில் நடந்த இரண்டு அற்புதங்கள்!

இரத்த வெள்ளத்தில் இருந்த மகளை உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றப்பொழுது தலையில் ஸ்கேன் எடுத்தார்கள். தலையில் 3 இடத்தில் block இருந்தது. 2 இடத்தில் இரத்தக்கசிவு ஏற்பட்டதை கண்டு பிடித்தார்கள். மகள் பிழைக்க வாய்பே இல்லை என சொல்லி விட்டார்கள். இருப்பினும் 48 மணி நேரம் கழித்து பார்க்கலாம் என நேரம் குறித்தார்கள்.

உடனே நான் அன்பரின் ஊழியத்திற்கு இந்த தகவலை சொன்னேன். அன்று மாலை 5:30 மணியளவில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் அந்த மகளுக்காக போனில் ஜெபித்தார்கள். ஐயா ஜெபிக்கும்பொழுதே மகள் கை, கால்களை அசைக்க ஆரம்பித்தாள். ஜெபம் முடித்தவுடன், அம்மா எனக்கு வலிக்குது என பேச ஆரம்பித்தாள். அதன்பின் பரிபூரண சுகத்துடன் ஒரு வாரத்திலேயே மருத்துவமனையிலிருந்து வீடு திரும்ப ஆண்டவர் உதவி செய்தார். இப்பொழுது உடலில் வேறு எங்கும் அடிபட்ட அறிகுறியே இல்லாமல் நல்ல சுகத்துடன் மகள் இருக்கிறாள். ஜீவனை திருப்பிக் கொடுத்து, அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஏற்ற நேரத்தில் பாரத்துடன் ஜெபித்த ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். **– திருமதி. சரோஜா, நாகர்கோவில்.**



# ஜெபத்திற்குப் பதில் கிடைக்க நாம் செய்ய வேண்டியவை!



**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா**

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான பங்காளர்களே! ஜெப வீரர்களே!

கர்த்தரும் இரட்சகருமாகிய அதிசீக்கிரமாய் வரப்போகிற ராஜாதி ராஜாவாகிய இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்! கிருபையும், சமாதானமும், கர்த்தருடைய மிகுந்த இரக்கங்களும் எப்பொழுதும் உங்களோடு இருப்பதாக.

நாட்களும், வருடங்களும் விரைவாக ஓடிக் கொண்டிருக்கிறது. நாட்கள் விரைவாக ஓட ஓட இன்னொரு பக்கம் நாட்கள் பொல்லாதவைகளாக இருப்பதையும் பார்க்கிறோம். (எபே.5:16) மனிதருடைய அன்றாட வாழ்க்கை முறையும் மாறு பட்டுக் கொண்டே இருக்கிறது. மனுஷனுடைய அறிவும் பயங்கரமாய் வளர்ச்சியடைந்துக் கொண்டுதான் இருக்கிறது. (தானியேல் 12:4) பல புதிய புதிய கண்டுபிடிப்புகளினால் மனிதனுடைய வாழ்க்கைதரத்தின் உயர்வுகளையும் நாம் காண்கிறோம். அதே நேரத்தில் ஆவிக்குரிய பிரகாரமாக பார்க்கும்பொழுது ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லையே என பலர் இன்றைக்கு சோர்ந்து போயிருப்பீர்கள். உங்களுக்காகவே இந்த தேவ செய்தியை ஜெபத்துடன் எழுதுகிறேன்.

- கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்...
- ... கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளு கிறான்! மத்தேயு 7:7.8

ஒரு சிலருக்கு அவர்கள் விரும்புகிற காரியங்கள், கேட்கிற காரியங்கள் அனைத்தும் எந்தவித கஷ்டமும் இல்லாமல் எளிதாக கிடைப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு சிலர் துவக்கத்தில் சில காரியங்களுக்காக அதிக பாடுகளின் ஊடாக சென்றே அவைகளை பெற்றுக் கொள்கிறார்கள், அதன்பின் அவர்கள் ஒரு ராஜரீகமான வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருப்பதையும் அறிகிறோம்.

சில பெரிய பெரிய ஸ்தாபனங்கள், கம்பெனிகள் சட்டென்று உருவாகி விடுகிறது. உதாரணமாக திரு.பாட்டா ஷூ கம்பெனியினுடைய உரிமையாளரின் வாழ்க்கையை பார்க்கும்பொழுது அவர் எவ்வளவு சீக்கிரமாய் குறைந்த அளவு சில்லிங் வருமானத்திலிருந்து மில்லியன் டாலர் கணக்காக உயர்வு பெற்றதை நாம் காண்கிறோம். அது மாத்திரமல்ல, சில சம்பவங்களும், அன்பின் செயல்களும்கூட சிறுமைப்பட்டவர்களை சட்டென்று உயர்த்தி விடுகிறது.

உதாரணமாக, நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். அதிக கனம் பெற்றவர்களும், பணக்காரர்களும் வரக்கூடிய ஒரு பெரிய ஹோட்டலுக்கு பிச்சைக்காரர் வேடத்தில் ஒரு பெரியவர் வந்தார். அந்த மனிதர் பிச்சைகார தோற்றத்தில் இருப்பதை கண்டு அந்த ஹோட்டல் மேலாளர் முதற்கொண்டு பணியாளர் அனைவருமே அவரை ஏளனமாய் நினைத்து,

அவருக்கு எந்த வித உதவியும் செய்யாமல், வெளியே துரத்திவிட முயற்சி செய்தார்கள். அந்த இடத்தில் தேவனுக்கு பயந்த இளம் பெண் ஒருவரும் பணிசெய்துக் கொண்டிருந்தார். அந்த பெண் உடனே சிறந்த உணவை தன்னுடைய கணக்கில் வாங்கி, அதை பிச்சைக்காரர் உண்பதற்கு கொடுத்தாள். அதைப்பார்த்த ஹோட்டலின் மேலாளர் அவளை திட்டி வேலையை விட்டு போகும்படி சொன்னார். இந்த பிச்சைக்காரர் வேஷத்தில் வந்த மனிதர் நன்றாக சாப்பிடுகிறார். அதன்பின் சாப்பிட்ட தட்டின் கீழ் ஒரு தாளை வைத்துவிட்டு போனார். அதை அந்த பெண்மணி எடுத்து பார்க்கும்பொழுது அதில் அவருடைய அலைபேசி எண்ணும், கையெழுத்தும் இருந்தது. அந்த கையெழுத்துக்கு பின்னால் "நான் தான் இந்த ஹோட்டலின் உரிமையாளர்" என எழுதப்பட்டு இருந்தது. "என்னை சிறப்பாக கவனித்த பெண்மணியாகிய உன்னை மேலாளர் வெளியே தள்ளினாலும் நான் உன்னை தள்ளவில்லை, அற்பமாய் எண்ணப்பட்ட நீ தான் நாளையிலிருந்து இந்த ஹோட்டலுக்கு மேலாளர்" என்றார். அவளை ஏளனமாய் நினைத்த அனைவரும் வேலையை விட்டு அனுப்பப்பட்டனர். இத்தகைய உண்மையான காரியங்களை பார்க்கும் பொழுது நமக்குள்ளும் சங்கீதம் 73–ல் ஆசாப் தேவனிடத்தில் முறையிடுவது போல் கேள்வி கேட்க தோன்றும். மற்றவர்களுக்கு எல்லாம் ஆண்டவர் செய்கிறாரே எனக்கு ஏன் செய்ய மாட்டேன் என்கிறார். என் ஜெபங்களையும், தபங்களையும், உபவாசங்களையும் அவர் ஏன் கேட்க மாட்டேன் என்கிறார் என்ற கேள்வி உங்களில் அநேகருக்கு இருக்கலாம் கலங்காதீர்கள்!

"கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என சொன்ன இயேசு கிறிஸ்து ஒரு நாளும் பொய் சொல்ல மாட்டார். அவர் "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். (யோவான் 14:14) ஆகவே நாம் ஏன் கலங்க வேண்டும். ஆனால் பல காரியங்களில் நம் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காததற்கு காரணம் உண்டு. அதை சற்று விளக்கிக் கூறுகிறேன்.

## ஜெபத்திற்கு பதில் வர தடையான காரியங்கள்!

என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். (சங்.66:18) (ஏசாயா 58:3-6)

மேற்கூறிய வசனங்களின்படி நாம் செய்கிற பாவங்கள் நம்மையும், தேவ பிரசன்னத்தையும் பிரிப்பதாக இருக்கிறது. (ஏசாயா 59:1-4) இன்றைக்கு அக்கிரமங்கள் செய்கிறவர்கள் எல்லாம் நன்றாய் வாழ்கிறார்களே, பெரிய பெரிய பதவியில் இருக்கிறார்களே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவைகள் அனைத்தும் நிழலைப்போல கடந்து போய்விடும். மனித வாழ்க்கை மாயை, அவர்கள் எவ்வளவு சம்பாதித்தாலும் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் ஆயிரக்கணக்கான மக்களை கொன்று அதிகாரத்திற்கு வந்தாலும், முடிவில் நித்திய நரகத்தை அடைகின்றார்கள். ஆனால் கர்த்தருக்கு பயந்த நாமோ ஜெபிப்பதற்கு

முன்பு நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும். அறிந்தோ, அறியாமலோ செய்த அக்கிரமங்களுக்காக இயேசுவிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும். அப்பொழுது அவர் தம்முடைய இரத்தத்தால் நம்மை கழுவுவார். நம்மை மன்னித்து தம்முடைய இன்முக பிரசன்னத்தால் நம் ஜெபத்தை கேட்டு நம்மை ஆசீர்வதிப்பார்! (எண்.6:24-26)

## ஜெபத்தில் தேவசித்தம் ஒன்றே நிறைவேற விரும்ப வேண்டும்!

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். 1யோவான் 5 : 14

நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்பொழுது எதை வேண்டிக்கொள்கிறோமோ அதை அவருக்கு சித்தம் தானா என்பதை முதலில் அறிய வேண்டும். தேவனுக்கு சித்தமில்லாத காரியத்தை கேட்டால் முடிவில் அது நமக்கு பெரிய இழப்பையும், சோர்வையும், வீழ்ச்சியையும் கொடுக்கும் என்பதை தேவன் அறிந்தபடியால் அந்த ஜெபத்திற்கு பதில் கொடுக்காமல் போய்விடுவார். உடனே நாம் சோர்ந்துப்போய், நம் ஜெபத்தை கர்த்தர் கேட்க வில்லை என்று அழக்கூடாது. எல்லாவற்றிலும் கர்த்தருடைய சித்தத்திற்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து நாம் ஜெபிக்க வேண்டும். அவ்வாறு ஜெபித்து அந்த காரியங்கள் நடக்கா விட்டாலும் ஸ்தோத்திரத்தோடு தேவனுடைய சித்தம் மாத்திரம் நம் வாழ்வில் நிறைவேறட்டும் என்று விசுவாசத்துடன் காத்திருக்க வேண்டும்.

ஒரு சமயத்தில் ஒரு வாலிப பிள்ளையை அவளுடைய பெற்றோர் என்னிடத்தில் ஜெபிக்க அழைத்து வந்தார்கள். அந்த வாலிப பிள்ளை மிகவும் முரண்டு பிடித்தவளாக இருந்தாள். என்னிடத்தில் வந்து "நான் சொல்வதை மாத்திரம் நீங்கள் கேட்க வேண்டும், என்னுடைய பெற்றோர்கள் என்னை வேதனைப்படுத்து கிறார்கள், அடிக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள், நான் கேட்கும் காரியத்தை செய்யமாட்டேன் என்கிறார்கள்" என்று சொல்லி அழுதாள். எனக்கும் அவளை பார்த்தபொழுது பரிதாபமாய் இருந்தது.

இன்னொரு பக்கம் அந்த பெண்ணின் பெற்றோர் கண்ணீரோடு நின்றதையும் பார்த்தேன். பெற்றோரிடம், அவர்கள் வேறுபட்டு இருப்பதன் காரணத்தை கேட்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ என்னை தடை செய்தார். ஏனென்றால் பெற்றோரிடத்தில் கேட்டு நான் ஏதாவது சொன்னால் அது அந்த பிள்ளைக்கு ஏற்றதாய் இருந்தால் அந்த பிள்ளை என்னை ஆதரிக்கும்,பெற்றோருக்கு ஆதரவாய் சொன்னால் பிள்ளை என்னை வெறுக்கும். எனவே எனது ஜெப அறைக்கு சென்று ஜெபித்தேன்.

அப்பொழுது இயேசு எனக்கு தெளிவாய் காண்பித்தார். வெளியே வந்து அந்த வாலிப பிள்ளையை நான் பார்த்து "நீ பி.எஸ்சி. விலங்கியல் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றி ருக்கிறாய், உன்னை பெற்றோர் மேற்படிப்பிற்கு போகச் சொல்கிறார்கள், ஆனால் நீ அதற்கு இசையாதபடி ஒரு கால்நடை மருத்துவர் மீது ஆசை கொண்டு அவரைத் தான் திருமணம் செய்வேன் என்று எண்ணுகிறாய். ஆனால் நான் ஒன்றை சொல்கிறேன், இது தேவனுடைய சித்தமல்ல,

காரணம் அவன் ஏற்கனவே பல பெண்களை திருமணம் செய்து, அவர்களை கெடுத்து அடிமை களாய் வைத்துள்ளான், இதை நீ நம்பு! எனவே இந்த திருமணம் வேண்டாம்" என்று கூறினேன். அவள் மிகுந்த கோபத்தோடு எழுந்து போய் விட்டாள். முடிவில் அவளுக்கு நடந்த பரிதாபமான நிலையை அறிந்து வருந்தினேன். எப்படி யென்றால், ஒரு நாள் செய்தித்தாளைப் பார்த்தப் பொழுது அவளுடைய பெயர் எழுதப்பட்டு இருந்தது. அவள் தற்கொலை செய்துக்கொண்டதாக அதில் எழுதியிருந்தது. என்ன காரணம் என்றால், அவள் விரும்பின அந்த மருத்துவரையே பிடிவாதம் செய்து சர்ச்சில் ஆடம்பரமாக திருமணம் செய்துக் கொண்டாள். சந்தோஷத்தோடு கணவர் வீட்டிற்கு சென்றப்பொழுது அங்கு எல்லா வாசல்களும் திறந்திருந்தது.

திருமண வாழ்க்கையை சந்தோஷமாய் ஆரம்பித்தாள், நாட்கள் செல்லச்செல்ல இவளுக்கு சந்தேகம் வந்தது, அந்த வீட்டில் மறைக்கப்பட்ட ஒரு அறை இருந்தது. அந்த அறையை அவள் காண விரும்பினாள். எனவே கணவர் வேலைக்கு சென்ற பிறகு அந்த அறையின் கதவை திறந்துப்பார்த்தாள். அங்கு அநேக வாலிப பெண்கள் கயிற்றினால் கட்டப்பட்டவர்களாய் காணப்பட்டார்கள். இவள் அங்கே சென்று அந்த கயிறுகளை அவிழ்த்து விட்டாள். அப்பொழுது அவர்கள் "நீயும் இன்னும் கொஞ்சம் நாளில் எங்களைப் போல மாறி விடுவாய். நாங்கள் அனைவரும் நியமிக்கப்பட்ட படியே இவரை திருமணம் செய்தோம், முடிவில் இப்பொழுது கொடுமையாக நடத்தப்படுகிறோம் என்று கூறினார்கள். இதை கேட்டதும் கூச்சலிட்டு அழுதாள், அப்பொழுது தான் அவளுக்கு உணர்வு வந்தது. தன்னுடைய பெற்றோரும், தேவ ஊழியக்காரரும் அந்த நபர் வேண்டாம் என்று சொன்னதை நினைத்துப் பார்த்தாள், நான் அவசரப்பட்டு திருமணம் செய்துக் கொண்டேனே என கலங்கினாள், ஆனால் என்ன பிரயோஜனம்? ஏமாற்றி திருமணம் செய்துக்கொண்ட அந்த கணவர் வீட்டிற்கு வருவதற்குள் அவள் தற்கொலை செய்து கொண்டாள். எவ்வளவு பரிதாபமான முடிவு பாருங்கள். ஆகவே நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும் பொழுது நம் விருப்பம் தான் நிறைவேற வேண்டும் என பிடிவாதமாய் கேட்கக்கூடாது. தேவ சித்தம் ஒன்றே நிறைவேறும்படி விரும்பி ஜெபிக்க வேண்டும்.

## ஜெபத்தில் மன்னிக்க வேண்டியவர்களை மன்னிக்க வேண்டும்!

- நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது. ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி. அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.
- நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப் பார் என்றார் - மாற்கு 11: 25, 26

நம்மை பகைத்து நம்மை துன்பப்படுத்தின மக்களை நாம் மன்னிக்க வேண்டும். நாம் பிறருடைய தப்பிதங்களை மனதார மன்னிக்க வேண்டும். மனதிலே வைத்து அவர்களை பழி

வாங்க வேண்டும் என்று எண்ணக்கூடாது. கர்த்தருடைய சமூகத்தில் வரும்பொழுது நம் உள்ளத்தில் யார் மீதும் காழ்ப்புணர்ச்சி வைத்திருக்கக்கூடாது. இது கொஞ்மாகத் தான் இருக்கும். ஆனால் கர்த்தர் நம்மை உணர்த்துவார். எப்படி உணர்த்துவார் என்பதை நான் உங்களுக்கு விளக்கிச்சொல்கிறேன்.

என்னுடைய வாழ்வில் அநியாயமாக என்னை கொடுமைப்படுத்தினவர்கள், வேதனைப் படுத்தியவர்கள் அநேகர் உண்டு. இவர்களில் 80 சதவிகிதம் கிறிஸ்தவர்கள். நான் செய்த நன்மைக்கு மாறாக பலவிதங்களில் எனக்கு துரோகம் செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்த கொடுமைகளை என்னால் மறக்கவே முடியாமல் இருந்தது. கர்த்தர் மாத்திரம் என்னோடு இராதிருந்தால் வெகு காலத்திற்கு முன் மரித்தவன் போல என்னை மாற்றி இருப்பார்கள். என்னால் பல வருடங்கள் அவர்களை மன்னிக்க முடிய வில்லை.

ஒரு நாள் பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசினார். என் அன்பு மகனே! இவர்கள் தான் உனக்கு விரோதமாய் இருந்தார்கள் என்று நீ நினைக்கிறாய். அவர்கள் அல்ல, அவர்களுக்குள் இருக்கிற சாத்தான், உனக்கென்று நான் பெரிய திட்டத்தை வைத்திருக்கிறபடியால் அதை கெடுக்கும்படி அவர்களை தூண்டிவிட்டு இத்தனை அகோரமான காரியங்களை செய்ய வைத்தான். அதனால் நீ அவர்களை மன்னித்து விடவேண்டும். ஏனென்றால் நீ எத்தனையோ முறை நம்பிக்கையற்றவனாக தற்கொலைக்கு முயற்சி செய்தாய். நான் உன்னை கைவிட்டேனா? தற்கொலை செய்வது பாவம் என்பது உனக்கு தெரியா விட்டாலும் நான் உன்னை குற்றம் சாட்டவில்லை. உன்னை மன்னித்து உன் ஜெபங்களை எல்லாம் நான் கேட்டேன். உன்னை ஆசீர்வதித்தேன். நீ செய்த அனைத்து தற்கொலை முயற்சிகளோடு ஒப்பிட்டு பார்க்கும்பொழுது, உன் சத்துருக்கள் உனக்கு செய்தது ஒரு சிறிய அளவு தான் (மத்.18:21-35) எனவே எனக்காக அவர்களை மன்னித்து விடு என்றார்.

பரிசுத்த ஆவியானவர் அந்த நேரத்தில் காண்பித்த வேத பகுதியை நான் வாசித்து ஆழமாக தியானித்தேன். அப்பொழுது எனக்கு அது புரிந்தது. ஒரு பெரிய பணக்கார எஜமான் தன்னுடைய தலைமை வேலைக்காரனுக்கு 16 ஆயிரம் தாலந்து பணத்தை கொடுக்கிறான். அதின் மதிப்பு இந்த காலத்தின் கணக்கின்படி 92 மில்லியன் டாலராகும். (அதாவது 9.2Crx80-ல் பெருக்கிக் கொள்ளுங்கள்) யோசித்துப்பாருங்கள்! அந்த எஜமான் ஒரு பைசா கூட வாங்காமல் அந்த தலைமை வேலைக்காரனை முழுவதுமாக மன்னித்து விட்டார். ஆனால் இவருக்கு கீழே ஒரு சாதாரண ஊழியன் இருந்தார். அவன் இவனுக்கு தரவேண்டியது 100 வெள்ளிப் பணம். அதாவது 22 டாலராகும். (நம் ஊர் பணத்திற்கு ரூ.1,800) ஆனால் இந்த தலைமை வேலைக்காரனோ தனக்குக் கீழிலிருந்த அந்த மனிதன் பணத்தை திருப்பிக் கொடுக்க கஷ்டப்பட்டபொழுது அவனை துன்புறுத்தி சிறையில் அடைத்து விட்டான். இதை கேட்ட எஜமானுக்கு எப்படி இருந்திருக்கும். வேதத்தில் அந்த பகுதியை வாசித்து பாருங்கள். எனவே தான் கிறிஸ்தவர்கள் தங்கள் சத்துருக்கள் தங்களை கொலை செய்ய தேடினாலும் அவர்களை மன்னிக்கிறார்கள்.

இயேசுவும் கொல்கொதா மலையில் தன் ஜீவன் பிரியும் பொழுது அவரை சிலுவையில் அறைந்தவர்களுக்காக பிதாவிடம் வேண்டிக் கொண்டது போல நாமும் மன்னிக்க ஆயத்தமா யிருக்க வேண்டும். அப்படி நாம் மன்னிக்கும் பொழுது நம்முடைய தவறுகளையும் கர்த்தர் மன்னிப்பார், ஜெபங்களை கேட்பார்.

இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந் தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நமக்கு கடுகு அளவு விசுவாசம் இருந்தாலும் கூட போதும். (லூக்கா 17: 5.6; நீதி. 21:13) இந்த மூன்று வசனங்களை கவனமாய் படியுங்கள்.

## கர்த்தர் விரும்புகிற நிறைவான விசுவாசம்!

கர்த்தர் விரும்புகிற நிறைவான விசுவாசத்தை நாம் எப்படி பெறமுடியும் என்பதை அறிந்து கொள்வோம்.

1. **கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்தார் அந்த உயிர்த்தெழுதலில் வைக்கும் விசுவாசம்** (1 கொரி. 15:14)
2. **இயேசுவின் நாமத்தின் மேல் வைக்கும் விசுவாசம்** (அப்.3:16)
3. **தேவனுடைய வசனத்தினால் வரும் விசுவாசம்.**

பரிசுத்த வேதத்தில் இயேசுவும், அவருடைய உண்மையான தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர் களும் விசுவாசத்தில் செய்த அற்புதங்களை கவனமாக படித்து நம்புங்கள். நாமும் கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தால் அவற்றை செய்ய முடியும் என்று நம்புங்கள். அப்படி பூரணமாக நம்பும்பொழுது தேவனுடைய வார்த்தைகள் மீது நமக்குள்ள சிறிதளவு விசுவாசம் மலைகளை பெயர்க்கத்தக்க பெரிய விசுவாசமாக மாறும் (மாற்கு 11:23; 9: 23)

பல சமயங்களில் நான் நினைப்பேன், ஆபத்தான நிலையில் இருக்கிற மக்களுக்காக நான் பாரத்தோடு ஜெபித்தேன். உதாரணமாக மரித்துப் போனவர்கள், நம்பிக்கை இழந்தவர்கள், யாருடைய உதவியும் கிடைக்காத இக்கட்டான நிலையில் இருக்கிறவர்களுக்காக நான் ஏறெடுக்கும் ஜெபம் மிக மிக சுருக்கமாக இருக்கும்.

ஒரு சமயத்தில் ஒரு வாலிப பிள்ளை சடுதியாக மரணம் அடைந்தாள். அவள் இறந்து சுமார் 12 மணி நேரமாகிவிட்டது. உறவினர்கள் அனைவரும் அந்த பிள்ளையின் சடலத்தை எரிப்ப தற்கு ஆயத்தமாக இருந்தார்கள். பிள்ளையின் தகப்பனோ, அவளை குறித்து என்னிடத்தில் சொன்னார்கள். அப்பொழுது நான் அந்த வாலிப பிள்ளையை பார்த்து "நீ எந்த மட்டும் தூங்கிக் கொண்டிருக்கிறாய். இளைப்பாறிக் கொண்டி ருக்கிறாய். இருளின் அதிகாரத்திலிருந்து இயேசுவின் நாமத்தில் வெளிச்சத்திற்கு எழும்பி வா" என்று கூறினேன். உடனே மரித்த அந்த பிள்ளை எழும்பி உட்கார்ந்தாள். இந்த விசுவாசம் எனக்கு எப்படி வந்தது. அதை நீங்களே வேதத்தில் படியுங்கள். (மாற்கு 5:22-24; 35-42) தேவன் மேல் நாம் வைக்கும் விசுவாசத்திற்கு பெரிய ஜெபம் தேவையில்லை. ஒரு சிறிய விசுவாச கட்டளை போதும். அது கடுகு அளவாக இருந்தாலும் சந்தேகம் அதில் இருக்கக்கூடாது. அத்துடன் உங்கள் வாழ்க்கை பரிசுத்தமாக இருக்க

வேண்டும். நீதிமொழிகளில் சொல்லப்பட்டது போல ஏழையின் கூக்குரலுக்கு நாம் செவி கொடுக்க வேண்டும். இவைகளையே தம்முடைய பிள்ளைகளிடத்தில் தேவன் எதிர்பார்க்கின்றார்.

நானும் என் மனைவியும் திருமணமான நாளிலிருந்து நூற்றுக்கணக்கான ஏழைகளை பிரதிபலன் கருதாமல் ஆதரித்துள்ளோம். எனவே மிக எளிதாக கர்த்தர் எங்கள் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். நீங்களும் அப்படி செய்வீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்கள் ஜெபங்களை எல்லாம் கேட்பாராக!

- அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசையனுப்பி, சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக.
- நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து, உமது சர்வாங்க தகன பலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக.
- அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக.

சங்கீதம் 20:2-4

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! அதிகாலை 5 மணிக்கு எங்களது அனுதின அற்புதம் என்ற நிகழ்ச்சியை Ministry of Jesus Youtube வாயிலாக வழங்கி வருகிறோம். அதில் உங்கள் வாலிப பிள்ளைகளுக்கான விசேஷித்த ஒரு செய்தியை கொடுத்துள்ளேன். அதைக் கேட்டு பயனடையுங்கள். **தலைப்பு : வெற்றியின் இரகசியம்.**

இந்த செய்தி உங்கள் வாலிப பிள்ளைகளுக்கு மிகுந்த பிரயோஜனமாக இருக்கும். அதற்கான **லிங்க்-ஐ** இத்துடன் தருகிறேன். நீங்கள் அதை கவனமாக கேட்டு உங்கள் பிள்ளைகளும் கேட்கும்படி சொல்லுங்கள். அப்பொழுது அவர்கள் விசுவாசம் கூடும். வேண்டாத நடத்தைகள் மாறும், வாழ்க்கையில் முன்னேறுவார்கள்.

https://youtu.be/RSMn3NYMmKs?si=X31lfMXlp0Oe5o7t




Tamil Whats App No. + 91 95004 87059



# 2025 பிப்ரவரி மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

## ஜெபம்

01 நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். (யாக்.5:16)

02 இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். (கொலோ.4:2)

03 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். (எபே.6:17)

04 பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன் மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான். (அப்போஸ்.28:8)

05 ... அவர் நிமித்தம் இடைவிடாமல் ஜெபம்பண்ணப்படும், எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவார். (சங்.72:15)

06 ... அவன் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்போது, அவர் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணி, அவனுக்கு ஒரு அற்புதத்தைக் கட்டளையிட்டார். (1நாளா.32:24)

07 எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். (அப்போஸ்.10:2)

08 என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். (லூக்.22:42)

09 அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, (அப்போஸ்.4:31)

10 எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான். (யாக்.5:17)

11 ... மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபே.6:18)

12 தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன். (அப்போஸ்.22:17)

13 … சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார். (லூக்.22:46)

14 உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன். (யாக்.5:13)

15 கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள் தேவ சந்நிதில் நினைத்தருளப்பட்டது. (அப்போஸ்.10:31)

16 என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. (சங்.66:20)

17 அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்போஸ்.2:42)

18 இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார். (மத்.17:21)

19 சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும். (லூக்.18:1)

20 விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். (யாக்.5:15)

21 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். 1தெச.5:17

22 நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். (அப்போஸ்.16:25)

23 மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். (சங்.66:19)

24 நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். (அப்போஸ்.6:4)

25 ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். (யாக்.5:13)

26 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (1தெச.5:18)

27 அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். (அப்போஸ்.12:5)

28 நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்.5:16)

# ஜனவரி மாதம் அன்பரின் ஊழியத்தின் வாயிலாக நடைபெற்ற கூட்டங்களின் அறிக்கை

## திருச்சி







## துநி










# திருநெல்வேலி, நாகர்கோவில்



பிரியமானவர்களே,

- திருச்சியில் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமையன்று அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெற்று வருகிறது.
- இந்த கூட்டத்திற்கு அன்பரின் ஊழிய பங்காளர்களும், புதிதாக ஊழியத்தைக் குறித்து அறிந்தப் பிள்ளைகளும் வந்து கலந்துக்கொண்டு, ஏராளமான ஆசீர்வாதங்களை பெற்றுச்செல்கின்றனர்.
- சகல நோயினாலும், பிசாசின் கட்டுகளினாலும் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காகவும் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கிறோம்.
- கூட்டத்தின் இறுதியில் உங்களை தனித்தனியாக நாங்கள் நேரில் சந்தித்து ஜெபித்து ஆலோசனை தந்துக்கொண்டிருக்கிறோம்.
- இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- இந்த புதிய ஆண்டிலிருந்து குடும்பமாக இந்த கூட்டத்திற்கு வாருங்கள்.
- முன்பக்கம் பலருடைய சாட்சிகளை படித்திருப்பீர்கள். அவ்வாறு உங்கள் வாழ்விலும் நீங்கள் அற்புதங்களை காண சாட்சியாக நிற்க தவறாமல் கூட்டத்திற்கு வாருங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# Praise Report
# துதி அறிக்கை



## இருதய அடைப்பு நீங்கியது!



என் பெயர் ராபர்ட். 4 வருடங்களுக்கு முன்பு கோயம்புத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துக்கொண்டேன். என்னுடைய இருதயத்தில் அடைப்பு இருந்தது. அத்துடன் டர் டர் என ஒரு சத்தம் என் இருதயத்திலிருந்து கேட்டுக்கொண்டிருக்கும். என் மனைவிக்கு இடது மார்பகத்தில் கட்டி இருந்தது. கூட்டம் முடிந்து தனி ஜெபத்தில் எங்களுக்கு உள்ள பிரச்சனைகளை **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் சொல்லி எங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். ஐயா அவர்கள் ஜெபித்து எங்கள் இருவருடைய தலையின் மேல் கைகளை வைத்த அந்த நிமிடத்திலேயே என் இருதயத்திலிருந்த அடைப்பு நீங்கியது. அந்த சத்தம் நின்றது. என் மனைவிக்கும் கட்டி மறைந்து பரிபூரண சுகம் பெற்றார்கள். எங்கள் வாழ்வில் கர்த்தர் செய்த இந்த மகத்தான செயல்களுக்காக கர்த்தரை மனதார துதிக்கிறோம். ஐயாவிற்காகவும் ஊழியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

**– திரு. ராபர்ட், மதுரை.**

## தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறின!



நான் திருமணம் ஆகி வந்தப்பொழுது நாங்கள் கூரை வீட்டில்தான் இருந்தோம். எங்களுடைய உறவினர்கள் பொறாமையினால் எங்கள் குடும்பத்திற்கு எதிராக செய்வினை செய்தார்கள். அதனால் பயங்கரமான போராட்டங்களோடு வாழ்ந்து வந்தோம். அந்த நேரத்தில் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டப்பொழுது **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் நீங்கள் வீடு கட்டுவீர்கள், நீங்கள் ஜெயிப்பீர்கள், கர்த்தர் உங்களை உயர்த்துவார் என மூன்று தீர்க்கதரிசனங்களைக் கூறி எனக்காக ஜெபித்தார்கள். ஐயா கூறிய அந்த தீர்க்கதரிசனங்கள் அப்படியே என் வாழ்வில் நிறைவேறியது. தேவகிருபையால் வீடுகட்டினோம், செய்வினை

கட்டுகள் அனைத்தையும் கர்த்தர் தாமே முறித்துப்போட்டார். நல்ல நிலையில் இருக்கிறோம். இன்று வரை கர்த்தர் ஜீவனோடு எங்களை காத்து வருகிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஐயாவிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

– திருமதி. ராதா, திருச்சி.

## செய்வினை கட்டிலிருந்து விடுதலை!

நான் கடந்த 7 மாதங்களாக திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்துக் கொண்டிருக்கிறேன். இந்த இடத்திற்கு வருகிறவர்கள் வாழ்வில் கர்த்தர் அநேக அற்புதங்கள் செய்து வருவதை நான் கண்டேன். முதன் முதலாக நான் கூட்டத்திற்கு வந்தப்பொழுது Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என்னிடம், உறவினர்கள் எங்களுக்கு செய்வினை வைத்திருப்பதை சொன்னார்கள். எனக்கும் கெட்ட சொப்பனங்கள், பாம்பு எல்லாம் கனவில் வரும் என்பதை ஐயாவிடம் சொன்னேன். ஐயா எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த நாளிலிருந்து பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட்டு அதிலிருந்து விடுதலையானேன். இப்பொழுது சமாதானமாக வாழ்ந்து வருகிறேன். என்னை அற்புதமாக விடுதலையாக்கிய கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

## 12 வருடத்திற்குப் பிறகு குழந்தை பாக்கியம்



எங்களுக்கு திருமணமாகி 12 வருடங்களாக குழந்தையில்லை. அதற்காக பல முயற்சிகள் செய்தும் ஒன்றும் வாய்க்கவில்லை. இறுதியாக ஒரு நண்பர் மூலம் அன்பரின் ஊழியத்தைக் குறித்து அறிந்து திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நானும் என் மனைவியும் வந்திருந்தோம். கூட்டம் முடிந்து Dr.ஆனந்த ஸ்திரா ஐயா, அம்மா இருவரும் எங்களுக்காக ஜெபித்தார்கள். ஐயா என்னிடம், நீ இரண்டு குழந்தைகளுடன் இங்கு வந்து சாட்சி சொல் வாய் என சொல்லி அனுப்பினார்கள். அவர்கள் வார்த் தையின்படியே எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். மூத்த மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. இளைய மகள் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறாள். எங்கள் வாழ்வில் அற்புதம் செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஐயா குடும்பத்தினருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– திரு. பீட்டர், திருச்சி.

Malayalam Whats App No. +91 94889 32937

## மரிக்கும் தருவாயில் இருந்தவரை உயிர்ப்பித்தக் கர்த்தர்



என் மனைவிக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டு அதற்கான சிகிச்சைகள் எடுத்தும் மிகுந்த பெலவீனத்துடன் இருந்தார்கள். கடந்த ஆண்டு ஜனவரி மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு என் மனைவியை அழைத்து வந்தேன். ஜெப நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் என் மனைவியைப் பார்த்து மரிக்கும் தருவாயில் இருக்கிற உங்களை கர்த்தர் உயிர்ப்பிக்கிறார் என தீர்க்கதரிசன மாக சொன்னார்கள். அந்த நாளிலிருந்து நுரையீரல் பிரச்சனை முற்றிலும் நீங்கியது. இந்த நாள் வரை என் மனைவி நல்ல சுக, பெலத்துடன் இருக்கிறார்கள். என் மனைவிக்கு மீண்டும் ஜீவனைக் கொடுத்த தேவனுக்கு மகிமை செலுத்துகிறேன்.

**– திரு. மார்டின் டேனியல் ஜெயக்குமார், முசிறி.**

## பிள்ளைகள் வாழ்வில் அற்புதம்

என் மூத்த மகள் செல்போனில் அதிக நேரங்களை செலவழித்தாள். அது மனதிற்கு அதிய வேதனையாக இருந்தது. என்னுடைய 2-வது மகள் பள்ளிக்கு செல்லாமல் ஒன்றரை மாதங்களாக வீட்டிலேயே இருந்தாள். இந்த இரண்டு காரியத்திற்காகவும் ஜெபிக்கும்படி ஜெப விண்ணப்பங்களை எழுதிக் கொடுத்து சென்றேன். தற்பொழுது மூத்த மகள் செல்போனை தவிர்த்து படிப்பில் கவனம் செலுத்துகிறாள். 2-வது மகள் பள்ளிக்கு தவறாமல் சென்றுக்கொண்டு இருக்கிறாள். என் பிள்ளைகள் வாழ்வில் நல்ல மாற்றத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன்.

**– திருமதி. பெர்லின் ஹேன்னா ஜெய்குமாரி, திருச்சி.**

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

NAMBIKKAI TELEVISION

வெள்ளி, சனி, ஞாயிறு

**8:30PM to 9:00PM**

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADHANA TV

வியாழன், வெள்ளி

**7:00PM to 7:30PM**

# ஊழியத்தையும், ஊழியக்காரரையும் நேசித்து ஜெபித்து தாங்கும் அன்புள்ளம் கொண்ட பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த மகத்தான செயல்!

எனது பெயர் மரியபுஷ்பம். நானும் எனது கணவரும் பல வருடங்களாக நாகர்கோவிலில் Dr.ஆனந்த ஸ்திரா ஐயா அவர்கள் நடத்தும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் தவறாமல் கலந்துகொண்டு, தேவ ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய நற்போதகங்களையும் பெற்றிருக்கிறோம்.

நாங்கள் மிகவும் எளிமையான குடும்பத்தை சார்ந்தவர்கள். ஒரு குடிசை வீட்டில் வாடகைக்கு குடி இருக்கின்றோம். ஐயா எங்கள் மகனுக்காக ஜெபித்து தீர்க்கதரிசனமாக கூறியது, "உங்கள் மகனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்து அதன் மூலம் உங்கள் வறுமையை கர்த்தர் நீக்குவார்" என்றார்கள். அதன்படியே நாங்கள் நினையாத வேளையில் கர்த்தர் பெரிய அற்புதம் செய்து என் மகன் வெளிநாட்டிற்கு செல்லும்படி உதவி செய்தார். எங்கள் மகனும் ஐயா அவர்களின் உபதேசத்தை கேட்டு கர்த்தருக்குள்ளாக ஜீவிக்கிறான். அவனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்தவுடன், நன்றி மறவாமல் கர்த்தரை ஸ்தோத்தரித்து தான் செய்த பொருத்தனை காணிக்கையை ஊழியத்திற்கு மகன் அனுப்பி உள்ளான்.

ஊழியத்திற்கு அவன் செய்த உதவியின் நிமித்தம் நாங்கள் மிகவும் சந்தோஷம் அடைகின்றோம். கர்த்தர் தாமே இதனை வாசிக்கிற ஒவ்வொருவர் உள்ளத்திலும் கிரியை செய்வாராக! நாம் ஒரு போதும் கர்த்தர் செய்த நன்மைகளை மறக்கவே கூடாது. எளிமை நிலையில் இருந்து அவர் உயர்த்தும் பொழுது நாம் நன்றி மறவாமல் ஊழியத்தைத் தாங்கவேண்டும். கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவரைத் துதிக்கின்றோம்.

– திருமதி. மரியபுஷ்பம், நாகர்கோவில்.


We Are Hiring!!

PRAYER WARRIORS

Language Known

Tamil-Malayalam

Tamil- Telugu

ministryofjesushr@gmail.com

Male / Female || Christians Preferred






**CAMERA MAN / VIDEO EDITORS**
**GRAPHIC DESIGNER**

(Any UG/PG Candidates)

Skills Required :Able to work in Adobe Photoshop, Adobe Illustrator, CorelDraw, Adobe Premiere Pro & After Effects

Male / Female, Christians Preferred

Apply to: ministryofjesushr@gmail.com

## வங்கிக் கணக்குகளின் விபரம்

**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**



**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
**(10.00 AM - 6.00 PM)**

**S.J. SAVES TRUST- ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

**Bank A/c. Name : SJ SAVES TRUST**
**Account No. 019150310875369**
**Bank Name : Tamilnadu Mercantile Bank**
**Branch : Palakarai, Trichy.**
**IFSC Code : TMBL 0000019**
**A/c Type : Current**

**மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய**

**Bank A/c. Name : SJ SAVES TRUST**
**Account No. 36477148891**
**Bank Name : State Bank of India**
**Branch : Cantonment, Trichy Main Branch**
**IFSC Code : SBIN 0000930**
**A/c Type : Current**

# S.J. SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப்போகப்பண்ணி,
தாய்தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல், நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ?
என் சிறுவயது முதல் அவன் தகப்பனிடத்தில் வளர்வது போல என்னோடே வளர்ந்தான் நான் என் தாயின் கர்ப்பத்திலே பிறந்தது முதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகுகொடுத்து நடத்தினேன்.
ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்து போகிறதையும், ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதையும் நான் கண்டபோது,
அவன் என் ஆட்டுமயிர்க் கம்பளியினாலே அனல்கொண்டதினால், அவன் இடை என்னைப் புகழாதிருந்ததும் - யோபு 31 : 16-20



கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான அருள் கொடையாளர்களே, அன்புள்ளம் கொண்ட சகோதர, சகோதரிகளே! இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.
கடந்த 40 வருடங்களாக நாங்கள் தனித்தும், தற்பொழுது பங்காளர்களாகிய உங்கள் உதவியுடனும் இணைந்து, ஆயிரக்கணக்கான ஏழை பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும், வயோதிபர்களுக்கும் பல்வேறு உதவிகளை செய்து வருகிறோம். கைம்மாறு கருதாமல் அவர்களுக்கு நன்மை செய்துள்ளோம். ஆகவே இந்த மாபெரும் அறப்பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் ஒவ்வொருவருக்கும் ரோமர் 2:10-ன்படி மகிமையும், கனமும், சமாதானமும் உண்டாகட்டும்.
இந்த நற்காரியத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார். தேவ பிள்ளைகளாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் பிறருடைய கஷ்டங்களையும், பாடுகளையும், புரிந்துக்கொண்டு நடக்க வேண்டும். அது மிகவும் முக்கியம். நாம் நற்கிரியைகளை செய்ய கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாக இருக்கிறோம். எங்களுக்கு திருமணமான நாளிலிருந்தே இந்த அன்பின் அறப்பணியை செய்து வருகிறோம். எங்கள் வீட்டிலேயே பெற்றோர் இல்லாத பிள்ளைகளை எங்கள் சொந்த செலவில் வளர்த்து வந்தோம். கிறிஸ்துவின் அன்பு எப்பொழுதும் நம்மை நெருக்கி ஏவிக் கொண்டிருக்க





வேண்டும். (சுவிசேஷ ஊழியம் மாத்திரமல்ல, தான தர்மம் செய்வதிலும், யோபை போல எளியவர்களுக்கு உதவி செய்வதிலும் முனைந்து நிற்க வேண்டும்) நாம் ஒன்றையும் கொண்டு வந்ததும் இல்லை, ஒன்றையும் கொண்டு போவதுமில்லை.

பிரியமானவர்களே! வருகிற கல்வி ஆண்டிலே













மிகவும் எளிமையான ஏழை பிள்ளைகளை உயர்தர கல்வி கூடங்களிலும், கல்லூரிகளிலும் சேர்த்து படிக்க வைக்க விரும்புகிறோம். நீங்கள் ஒரு பிள்ளையை பொறுப்பெடுத்து உதவ முன்வரும்பொழுது அந்த பிள்ளையைக் குறித்த விபரங்களை உங்களுக்கு அனுப்புகிறோம். இதில் இரத்தசாட்சிகளுடைய பிள்ளைகளும், மிகவும் பின்தங்கிய கிராமத்தில் ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களுடைய பிள்ளைகளும் உட்படுவார்கள். உதாரணமாக, நீங்கள் ஒரு பிள்ளையை உங்கள் சார்பில் வளர்க்க விரும்பினால் ஒரு வருடத்திற்கு ஆகும் செலவு நாற்பதாயிரத்தை(RS.40,000/-) கொடுத்து தாங்கலாம். (உயர்தர கல்விக்குரிய பள்ளி கட்டணம் மட்டும்) உணவு, உடை மற்றவை எல்லாம் S.J.SAVES TRUST மூலம் பார்த்துக் கொள்வோம். இதற்காக ஜெபித்து செயல்படுங்கள். தேவனாகிய கர்த்தர் தாமே உங்களை மிகவும் ஆசீர்வதிப்பார்.

**இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன்**
**என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் - மத்தேயு 18 : 5**

சேலம் மாவட்டத்தில் உள்ள வெள்ளாள குண்டம். சேஷன் சாவடி. பிரிவு ரோடு
ஆகிய கிராமங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு
வீல் சேர். வாக்கர். வாக்கிங் ஸ்டிக். செவி திறன் கருவி போன்றவைகளை
S.J.SAVES TRUST மூலம் இலவசமாக வழங்கப்பட்டது.







# உலக செய்திகள்



கத்தார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மத்தியஸ்தத்தால் இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தது. இந்த போர் ஒப்பந்தம் இந்திய நேரப்படி மதியம் 12 மணிக்கு அமலாகியது. போர் நிறுத்தம் 42 நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும். கடந்த 2023-ம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி 250-க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்துசென்றனர். பின்னர் தற்காலிகமாக போர் நிறுத்தத்தின்போது 120-க்கும் மேற்பட்ட பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினரிடம் இன்னும் 94 பிணைக் கைதிகள் உள்ளனர். 34 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. விடுதலை செய்யப்பட உள்ள பணயகைதிகள் 3 பேரின் பெயர் பட்டியலை ஹமாஸ் வெளியிட்டபடியால் இஸ்ரேல் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



ஒரு மாணவர் கணிதத்தை பார்த்து எந்த அளவுக்கு பயப்படுகிறாரோ அந்த அளவுக்கு அவரது புரிந்து கொள்ளும் திறமை படிப்படியாக குறைந்து அவரது செயல் திறனும் குறையும்.

இந்தியாவின் கணிதமேதை சீனிவாச ராமானுஜனை கவுரவிக்கும் வகையில், அவரது பிறந்த நாளான டிசம்பர் 22-ம் தேதி தேசிய கணித தினமாக கொண்டாடப்படுகிறது. கணித பகுப்பாய்விலிருந்து முடிவிலா தொடர்கள் வரை ராமானுஜனின் படைப்புகள் பல நவீன கணிதக் கோட்பாடுகளுக்கு அடித்தளமாக உள்ளன. கணிதத்தில் முறையான கல்வி எதுவும் பயிலாத ராமானுஜன், இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் கணித துறையில் வரலாறு படைத்தார்.

கணிதக் கோட்பாடுகளை உருவாக்கத் தொடங்கிய சீனிவாச ராமானுஜன் 1911-ல் தனது முதல் ஆய்வறிக்கையை வெளியிட்டார். பிரிட்டனின் கேம்பிரிட்ஜில் இருந்த காலத்தில், அவரது கண்டுபிடிப்புகளை பல ஆவணங்களில் வெளியிடுவதற்கு பிரிட்டிஸ் கணித மேதை ஹார்டி ஊக்குவித்தார். 1918ஆம் ஆண்டில், ராயல் சொசைட்டியின் பெலோவாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது இந்தியர் என்ற சிறப்பை ராமானுஜன் பெற்றார்.








# We Are Hiring!!

ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Skills Required : Tally ERP 9

**Male / Female || Christians Preferred**

ministryofjesushr@gmail.com




## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்

“இந்த
QR code-ஐ உங்கள்
செல்போனில் ஸ்கேன் செய்து
அல்லது
95004 87061 என்ற எண்
மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும்
செயலிகள்
மூலமாகவும் காணிக்கை
அனுப்பலாம்.”



மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website) || Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 620018.

**Telugu Whats App No. + 91 91770 87860**

# பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!



என் பெயர் பிரதீபா. என் மகனும் மருமகளும் குழந்தைப் பாக்கியத்தை சில ஆண்டுகள் கழித்துப் பார்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் இருந்தார்கள். நான் அவர்களுக்காக, மகனின் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிக்கும்படி **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். பாஸ்டர் அவர்களும் ஜெபித்தார்கள். கர்த்தர் இரங்கி ஒன்றரை வருடத்திலேயே மகனுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்படி உதவி செய்தார்.

மருமகள் கருவுற்றிருந்த 8-வது மாதத்தில் குழந்தைக்கு உணவு போகிற **tube**-ல் தேவையான **food** போகாத காரணத்தினால் 8-வது மாதத்திலேயே ஆப்ரேஷன் மூலம் குழந்தை பிறந்தான். குழந்தையின் உடல் எடை1.700 கிலோதான் இருந்தது.

குழந்தை பிறந்து 3-வது மாதத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டு **ICU**-வில் அட்மிட் செய்யப்பட்டான். அவன் சரீர சுகம் மிகவும் மோசமாக இருந்தது. அப்பொழுது நான் பொருத்தனையோடு ஜெபித்தேன். தேவன் என் பேரனுக்கு சுகத்தை கொடுத்தால் 2025 ஜனவரி மாதம் தாம்பரத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு வந்து சாட்சி சொல்வதாக பொருத்தனை செய்தேன். என்ன ஆச்சரியம்! கர்த்தர் என் பேரனுக்கு இரங்கினார். ஜெபத்தை முடித்த அடுத்த நிமிடத்திலேயே என் பேரன் கை, கால்களை ஆட்டி நன்றாக சிரித்தான். அதன் பிறகு அவன் நல்ல சுகத்துடன் வீடு திரும்பவும் கர்த்தர் உதவி செய்தார். இப்பொழுது 6 கிலோ வரை அதிகரித்து நல்ல சுக, பெலத்துடன் இருக்கிறான். அதற்காக கர்த்தரை துதிக்கிறேன்.

அதுமட்டுமல்லாது என் தோழியின் மகன் திருமணம் முடிந்து விவாகரத்து ஆகி 11 வருடங்கள் தனித்து வாழ்ந்து வந்தான். அவனுக்காக ஜெபிக்கும்படி என் தோழி கூறினார்கள். நான் 2024-ம் வருடம் ஜனவரி மாதம் பொங்கல் விடுமுறையில் தாம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து பொருத்தனையோடு ஜெபித்தேன். தோழி மகனுக்கு திருமணம் நடைபெற்றால் 2025-ம் ஆண்டு ஜனவரி மாத கூட்டத்தில் சாட்சி சொல்வேன் என ஜெபித்து சென்றேன். கர்த்தர் அற்புதம் செய்தார். 2024-ம் வருடம் பிப்ரவரி மாதமே திருமணம் நடைபெற உதவி செய்தார். பொருத்தனை ஜெபத்திற்கு பதில் தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். எங்களுக்காக ஜெபிக்கிற பாஸ்டர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை கூறிக்கொள்கிறேன்.

joshua@mojindia.org

- திருமதி. பிரதீபா, சென்னை.

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள், அனல் மூட்டும் தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக
இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.



Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month



மதுரையில்

## அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்

காலை 9:30 முதல் மதியம் 2:00 வரை

பிப்ரவரி **08** சனிக்கிழமை

தேவ செய்தி

**Dr.ஆனந்த ஸ்திரா**

சிவபாக்யா மஹால் ஏ.சி., ஆரப்பாளையம் பேருந்துநிலையம் அருகில், ஞானஒளிவுபுரம், மதுரை.

தொடர்புக்கு : செல் – 94888 45627 வாட்ஸ் அப் – 95975 55066

நேரலை நிகழ்ச்சி தமிழில்

## 2025 பிப்ரவரி 8,9

LIVE

நேரம்: மாலை 7:00 மணி

LIVE

**Speaker: Dr. Jane Joshua & Family**

Dr. Jane Joshua



திருச்சியில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**9:30 AM to 2:00 PM**

பிப்ரவரி **22** சனிக்கிழமை

தேவ செய்தியாளர்கள்

**Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,